பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

6-00 பி. ப. மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/73) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. 82-வது விதியின்படி அறிக்கை.

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வழங்கும்) சட்டவரைவிற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் குறித்து.

MR. CHAIRMAN: The Hon. Minister for Revenue will now make a statement under rule 82 of the Tamil Nadu Legislative Council Rules.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே 30—11—1973 அன்று திரு. சுவாமிநாதன் அவர்கள் தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வழங்கும்) சட்ட வரைவு (சட்ட மன்றப் பேரவை சட்ட வரைவு எண் 11/1973) ஜனாதிபதி ஒப்புதல் பெறுவதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை பற்றி கேட்ட விளக்கத்திற்கு நான் பதிலளிக்கையில் மத்திய அரசிடமிருந்து கடிதங்களுக்கு ஏதாவது பதில் வந்து விளக்கங்கள் கேட்டால் விளக்கங்கள் கொடுக்கலாமென்றும், இதுவரையில் அந்த விளக்கங்கள் கொடுக்கவில்லை என்றும் கூறினேன். பிறகு நான் இதுபற்றி வருவாய்த் துறையில் விசாரித்ததில் மத்திய அரசிடமிருந்து ஏற்கனவே இந்தச் சட்டவரைவு பற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மனுக்களை இந்த அரசுக்கு அனுப்பி இந்த அரசின் கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவை பரிசீலனையில் உள்ளன. விரைவில் மத்திய அரசுக்கு இந்த அரசின் விளக்கம் அனுப்பப்படும். இந்தத் தவறு ஏற்பட்டதற்கு வருந்துகிறேன்.